உ
சிவமயம்

Nav:
aperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம்
(1889)
ஆவணிமாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ ஆவணி மீ உ௦உ (1947 செப்டம்பா 5 வெள்ளிக்கிழமை) [இல சரு

## கடவுளும் விஞ்ஞானமும்

### A. பாலசுந்தரம்

(முற்றொடர்)

விஞ்ஞானிகளில் ஒருவனும் நிரீசுரவாதி (கடவுள் இலலை என்ற கொள்கையுடையோன்) ஆகமாட்டான். விஞ்ஞானிகள் தத்துவங் கடந்த தனிமுதலாகிய ஒரே கடவுளை வணங்குவோராவர், விஞ்ஞானிக்கும் மற்றைய மக்களுக்கும் கடவுளையடையும் நிலையிலுள்ள வேறுபாடு என்னவென்றால் விஞ்ஞானி விஞ்ஞானத்தில் தன்னை மறக்கின்றான் மக்கள் புலன் நுகர்ச்சியில் அறிவை இழக்கின்றனர். இருவரும் கடவுளுக்குச் சம அளவு தொலையில் இருக்கின்றனர். விஞ்ஞானி விஞ்ஞானத்தை உலகியற் பொருள் அறிவுக்காக கொண்டு அதனைத் தீநெறியிற் செலுத்தாமல் (துருபயோகஞ் செய்யாமல்) திருப்பின் கடவுளை அடையக்கூடும். விஞ்ஞான ஆராய்ச்சி ஒரு முடிபை (சுருதாந்தத்தை) அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படுகிறது. தான் வெளிப்படுத்திய செய்திகளை அறிவித்தலேயன்றி வெளிபாகாமல் மறைந்துள்ள செய்திகளைப்பற்றி எதி கால நிகழ்ச்சிகளைக் கூறுதலும் விஞ்ஞானத்தின் சிறப்பியல்பாகும். ஒரு விஞ்ஞானி செய்த ஆராய்ச்சியை மற்றொரு விஞ்ஞானி முடித்துக் காட்டுகின்றான், இதனால் விஞ்ஞானம் நாளுக்குநாள் வளர்ச்சியடைகின்றது.

இத்தகைய ஆராய்ச்சிகளினால் பல அரிய பொருள்களைச் செய்து மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்யலாம். மாக்சுவெல் என்னும் விஞ்ஞானியின் மின்னொளி அலைகளின் ஆராய்ச்சி முறையை (Electro – Magnetic-wave Theory) மிகச் சிலரே அறிவர். ஆனால், ரேடியோவின் (Radio) முன்னால் உட்கார்ந்து கொண்டு மிகத் தொலையில் உள்ள நாட்டிலிருந்து செய்தி, சொற்பொழிவு, இன்னிசை முதலியவற்றைக்கேட்டு யாவரும் விஞ்ஞானத்தை மனமாரப் புகழ்கின்றனர். போரில் நச்சுப்புகையும் வெடிக்கும் (Explosives) பொருள்களும் மிகவும் தீய நெறியிற் பயன்படுதலைக் கண்டு விஞ்ஞானத்தைப் புறக்கணிக்கின்றனர். விஞ்ஞானம் அகநிலை வளர்ச்சிக்கும் அமைதிக்கும் (சாந்திக்கும்) கருவியாதலில்லை.

புதிய விஞ்ஞானங்கள் நடைமுறையில் வெளிப்படுத்திய செய்திகளேயன்றிப் பயனுள்ள கற்பனைக்கும் சிறப்பினைத் தந்துள்ளன. எடிங்க்டன் (Eddington ஜீன்ஸ் (Jeans) என்னும் விஞ்ஞானிகள், படைப்பின் உண்மை உருவம் கற்பனையால் தோன்றியது என்னுங் கருத்துடையவர்கள். ஆனால் எல்லோரும் இவர்களைப் போலக் கற்பனை செய்யமுடியுமா? ஐயந் தீர்க்கும் முறையில் ஈன்ஸ்டீனைப்போலக்கற்பனை செய்யமுடியுமா? ஒருபோதும் முடியாது.

இதேபோல, அனைவரும் சிறிதும் முயற்சியில்லாமல் கடவுளுடன் தொடர்புகொள்ள முடியுமா? முடியாது. வீடுபேற்றுக்காக ஒவ்வொருவரும் தானே முயற்சித்தல்வேண்டும். முயற்சியாலேற்படும் பயன் அவர் அவர்கள் நிலையைப் பொறுத்துள்ளது. தூய உள்ளத்தோடு கடவுளை வழிபடுகின்றவன் கடவுளையடைகின்றான். வீடுபேறு மெய்யுணர்வாலுண்டாகின்றது. மெய்யுணர்வு கடவுளிடம்உள்ள அன்பாலும், வழிபாட்டாலும் கிடைக்கின்றது. மெய்யுணர்வால் கடவுளையடைந்து பேரமைதியடைதல் எளிது. ஒவ்வொருவரும் இந்நிலையையடைந்தே தீரவேண்டும், பல பிறவிகளையெடுத்துப் பல சூழ்நிலைகளில் தங்கிப் பற்பல துன்பங்களையடைந்து இறுதியில் உயிர்கள் யாவும் திண்ணமாகக் கடவுளைவழிபட்டு வீடுபேற்றையடைதல் வேண்டும். இவ்வுடல் கடவுள் வழிபாட்டிற்காகவே கிடைத்திருக்கின்றது. இப்பிறவியிலேயே வீடுபேறடைதலும் காலந்தாழ்த்தலும் அவரவர்கள் விருப்பத்தையும் வழிபாட்டு நிலையையும் பொறுத்துள்ளன,

உலகில் உயிர்களைப் பற்பல சூழ்நிலைகளிற் கண்டு மனிதன் ஒரு சூழ்நிலையிற் கடவுளை வழிபட முடியாவிடின் தன்னை மற்றோர் சூழ்நிலையிற் காண விரும்புகின்றான் என்றதுணிவு உண்டாகின்றது' அச்சூழ்நிலை அவனுக்கு அப்பிறவியிலோ அல்லது மற்றொரு பிறவியிலோ கிடைக்கின்றது. அவன் விருப்பம் நிறைவேறுகிறது. வீடுபேறடைகின்றான். உதாரணமாக ஒரு பொருள் பெற்ற விவசாயியை எடுத்துக் கொள்ளுங்கள். அவனால் சிறிதுபோதாகிலுங் கடவுளை நினைக்க முடிவதில்லை. அவன், "நாம் ஏழையாயிருந்தால் வழிபாட்டிற்குச் சிறிது நேரம் கிடைக்குமே" என்று நினைக்கின்றான். ஏழையாகிவிட்டால், 'இவ்வேழ்மையைக்காட்டிலும்விலங்காய்ப் பிறத்தல் நல்லது' என்று எண்ணுகின்றான். அங்ஙனமே விலங்காய்ப் பிறக்கின்றான். பல நிலைகளை அடைந்து இறுதியில் மனிதப் பிறவியை எடுத்து மெய்ப்பொருளை யுணர்ந்து வீடுபேறடைகின்றான்.

கடவுள்வழிபாட்டிற்கு எத்தகைய திட்டமும் தேவையில்லை. நாள்தோறும் சிறிதுநேரம் மனத்தை உலகப் பற்றுகளினின்று நீக்கி அன்பால்மனமுருக இறைவனை நினைத்தல் வேண்டும். இம்முயற்சியில் முதலிற் பயனில்லை என்று தோன்றும். இம்முயற்சி நாளுக்குநாள் இறைவன் அருகில் சேர்க்கின்றது. இதனை நாளடைவில் யாவரும் உணரலாம். இறை வழிபாட்டாற் கிடைக்கும் இன்பமும், அமைதியும் சொல்லுந் தன்மை வாய்ந்தன அல்ல. இறைவன் தன்மையை அனுபூதிமான்கள் வாயிலாக நாம் அறியலாம்.

இதுகாறும் கூறியவாற்றால், இவ்வுலகத்திற்குத் தலைவன் கடவுள் என்பதும், இப்பெரும் புவனப் படைப்பு அக்கடவுளால் உண்டாகிய தென்பதும்; செல்வம் முதலியன மக்கள் வீட்டு நெறிக்கு இடையூறுயுள்ளனவென்பதும், முற்கால விஞ்ஞானிகள் படைத்தல்தொழிலில் மயங்கிய மயக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## பிரார்த்தனை

அஞ்ஞானத் தால்அடி யேன்பிழை செய்யினும் ஆரருள்சேர்
மெய்ஞ்ஞானத் தாய்பொறுத் தாட்கொள்ள வேண்டும் வியன்மறைதே
செஞ்ஞானத் தார்புகழ் போரூர் முருக சேகமுயிராம்
பொய்ஞ்ஞானக் கூட்டத்துக் குட்பற ஞகிய புண்ணியனே.

— சிதம்பரசுவாமிகள்

## எல்லைக்காந்தி சிறை

### ஜின்னுவின் கட்டளையா?

எல்லைப்புறக்காந்தி கான் அப்துல் கபார்கானும் அவரது சகோதரர் டக்ரர் கான்சாகிப்பும் சிறையாகினர் என்றும், அவர்கள் பாகிஸ்தான் தலைநகராகிய கராச்சிக்குக் கொண்டு வரப்பட்டனர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

கான் சகோதரர்கள் பாகிஸ்தான் இயக்கத்தை எதிர்த்து, சுதந்திர பட்டாணிஸ்தானம் அமைக்கக் கிளர்ச்சி செய்ததும், அதன் பயனாக, ஜின்னுவின் உத்தரவுப்படி எல்லைப்புற மந்திரிசபை கலைக்கப்பட்டதும ஈண்டுக் குறிப்பிடத்தக்கன.

## சிறைத்தண்டனை

### கொள்ளைலாபம் பெறுவோர்க்கு

"பிளாக் மார்க்கெற்"வியாபாரம் என்று சொல்லப்படும் கொள்ளை லாபம்பெறும் வியாபாரிமார் அக்கிரமத்தைக் குறைக்கவும் ஒழிக்கவும் பம்பாய்க் காங்கிரஸ் மந்திரிசபை ஓர் சட்டத்தை இயற்றியிருக்கிறது. இப்படியான வர்த்தகர் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டால் அபராதமே விதிக்கப்பட்டனர். அவர்கள் அபராதத்தை இறுத்துவிட்டு மீண்டும் தம் பழைய கிருத்திரமத்தில் மும்முரமாக ஈடுபடுவர்,

பம்பாய் அரசாங்கத்தின் புதுச் சட்டத்தின்படி கொள்ளை லாபம்பெறும் வியாபாரிமார்க்கு 7 வருஷச் சிறைத்தண்டனை விதிக்க இடம் இருக்கிறது.

## முதலாளி - தொழிலாளி

### சமத்துவம் ஏற்படும் காலம்!

தொழிலாளர்கட்கிடையே ஓர் போதும் வகுப்புவாதம் இருக்கக் கூடாது. அப்படியாக வகுப்புவாதம் பரவுமானால் தொழிலாளர் இயக்கம் சீரழிந்து நாசமாகிவிடும் என்று சென்றவாரம் நிகழ்ந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மாகாந்தி கூறினார் அவர் கூறியதாவது.

"தொழில் என்பது சாதி சமய பேதங்களை அகற்றி மனிதவர்க்கத்துக்கிடையே பரிபூரண ஒற்றுமையை ஏற்படுத்தும் ஓர் பெரிய சாதனமாகும். அப்படிப்பட்ட தொழில் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஓர் போதும் வகுப்புவாதத்தி லீடுபடக் கூடாது.

"தொழிலாளர் அகிம்சையையே கடைசிவரை கடைப்பிடிக்கவேண்டும், பலாத்காரம் ஒருபோதும் பயன் அளிக்கமாட்டாது: பலாத்காரத்தில் ஈடுபட்டு முதலாளி வர்க்கத்தை நசுக்க முயலுதல் பொன்முட்டையிடும் கோழியைக் கொல்லுதலை நிகர்க்கும். முதலாளி-தொழிலாளி என்ற இருவர்க்கத்தினரில், தொழிலாளிதான் சிறப்புடையவன். தொழிலாளி இன்றேல், பொன் வெள்ளி முதலிய உலோகங்களினால் என்ன பயன்? தொழிலாளிதான் இந்த உலோகங்களையும், மணிகளையும் முத்துக்களையும் அரும்பாடுபட்டு எடுக்கிறான்.

"தொழிலாளி—முதலாளி என்னும் இருபகுதியினர்க்கிடையிலும் பூரண ஒற்றுமை நிலவவேண்டும். இந்த இருசாராரும் ஒத்துழைப்பாரானால், உலகில் சமாதானமும் சாந்தியும் நிலைகொள்ளும். தொழிலாளர் முதலில் தம் அறியாமையைப் போக்க வேண்டும்; அறிவுடையவர்களாக வேண்டும். தமக்குள்ளே பூரண ஒற்றுமை யுடையவர்களாகவேண்டும்; அப்படிச் செய்துவிட்டு, முதலாளி வர்க்கத்தினருடனும் சமத்துவத்தை சமரசத்தை ஆதாரமாகக்கொண்ட ஒத்துழைப்பை நாடல்வேண்டும்; உலகிலேயுள்ள தொழிலாளர் அனைவரும், சாதிமத பேதமின்றி ஒன்று சேரவேண்டும். அப்படியிவர்கள் ஒற்றுமைகொள்ளுவார்களானால், முதலாளிமார், தாம் தர்மகர்த்தா என்ற நிலையில் பணத்தை விநியோகிப்பார்கள் அன்றிச் சொந்தப்பணம் என நினைத்துத் துர்விநியோகப்படுத்த மாட்டார்கள்; தொழிலாளரை நசுக்கவும்மாட்டார்கள். அப்படியான நிலைமை ஏற்படும் காலத்திலே முதலாளி-தொழிலாளி பேதமே இருக்க மாட்டாது. அப்படியான காலத்திலே தொழிலாளர்க்குப் போதிய உணவு, நல்ல சுகாதாரமான வீடு, கல்வி வசதிகள் எல்லாம் சம்பூர்ணமாகக் கிடைக்கும்"

## டக்ரர் மூன்ஜி சிறை

இந்தியாவின் மத்திய மாகாண அரசாங்கத்தின் உத்தரவுப்படி, பிரபல ஹிந்துமகாசபைத் தலைவர் டக்ரர் பீ. எஸ். மூன்ஜி சிறையாக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
ஆவணிமீ ௨௰உ வெள்ளிக்கிழமை


## நல்லைக்கந்தனை வந்தனை செய்க

"கந்தநம ஐந்துமுகர்தந்த முருகேசநம,
கங்கையுமைமதன்
மைந்தநம, பன்னிரு புயத்தநம,
நீபமலர்மாலை புனையுந்
தந்தைநம, ஆறுமுக ஆதிநம சோதிநம
தற்பரமதாம்
எந்தைநம, என்றும் இளையோய் நம.
குமாரநம," என்று தொழுதார்.

என்று இவ்வாறு தேவரீரை அக்காலத்திலே தோத்திரம் பண்ணியவர்கள் அரிபிரமேந்திராதி தேவர்களென்று கந்தபுராணத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது; அக்காலத்திலே சூரபன்மன் முதலிய அசுரர்களால் தாங்கொணு இடுக்கணடைந்த தேவர்கள், தங்களுக்கு நேர்ந்த இடுக்கணை நீக்கியருளும் வண்ணம் எல்லாம் வல்ல கைலாசபதியை இரந்து நிற்ப, அந்த இறைவன், தம் நெற்றிக்கண்ணி லிருந்து ஆறு தீப்பொறிகளைத் தந்து சரவணப் பொய்கையில் உய்ப்ப, அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாய் வடிவங்கொண்டு, கார்த்திகை மகளிர் சுரந்த பாலுண்டு, அப்பெண்களுக்குத் திருவருள் சுரந்து விளையாடி வரும்போது, உலக மாதாவாகிய உமையம்மையார் இறைவனருளால் எழுந்தருளிவந்து, தேவரீர் கொண்ட ஆறு குழந்தை வடிவங்களையும் தம் அருமைத் திருக்கரங்களால் தழுவிச் சேர்க்க, உடனே ஆறுமுகமும் பன்னிரு திருக்கரமும் செந்தாமரைச் சீறடியிரண்டுங் கொண்ட கந்தக் கடவுளாய்ப் பரமபிதாவுக்கும் உலக மாதாவுக்கும் அரிபிரமேந்திராதி தேவர்கட்கும் அகத்தியனாதி முனிவர்கட்கும், பாசம் நீங்கப்பெற்ற உயிர்கட்குங்காட்சி கொடுத்துக் 'கந்தன்' என்ற திருநாமத்தையும் பெற்றீராமே, கந்தக்கடவுளே! தேவரீருக்கும் உலகிலுள்ள சராசரங்களுக்கும் அன்னையாகிய இறைவியிடத்துள்ள அற்புத சத்திதான் என்னே! அந்தக் கந்தன் என்னுந் திருநாமத்துடன் இந்த நல்லையம்பதியிலே ஆதியிற் கோயில் கொண்டருளிய கருணையங்கடலே! இந்த ஆவணிமாசத்திலே உனக்குரிய மகோற்சவம் நிகழும் புண்ணிய காலமாகிய இருபத்தைந்து தினத்திலும் உனது திருவருள் வெள்ளம் பெருகிக் கரைகடந்து பரவுகின்றதென்று உன்னடியார் சொல்லி ஆனந்தமடைந்து அத்திருவருள் வெள்ளத்திலே திளைக்கின்றார்களே! தொல்லையிற் புலவர் போற்றும் நல்லையம்பதி வாழ்வே! நீ எழுந்தருளிய திருக்கோயிலில், உன் திருச்சந்நிதியில் ஆண்கள் பெண்கள் சிறியார் பெரியார், வறியர், செல்வர், உயர்ந்தோர், அன்பர் வன்பர், நல்லார் தீயார், கற்றார் கல்லார், அதிகாரி அடிமை என்ற பேதங்கள் எள்ளளவு மின்றி எல்லாரும் குகமயமாகத் தானே காணப்படுகின்றனர்; இது உன் திருவருட் செயல்தானே, ஐயா, முருகையா!

அமரர் இடர்தீர அசுரர் அடல் தீரச் சமரவடிவேலெடுத்த சண்முகா! உன்னை வழிபட்டுக்கொண்டு இந்த யாழ்ப்பாண நாட்டிலே வாழும் மக்களுக்கு யுத்த காலத்தில் வெடிகுண்டு முதலியவற்றாலும், பெருமழை பெருவெள்ளம் உணவுப் பஞ்சம் முதலியவற்றாலும் தொற்று நோய்களாலும் வேறு எவ்வகையான தீமைகளாலும் ஆபத்து நேராவண்ணம் பாதுகாத்துவரும் அருட்கடல் நீயாவாய்; நாட்டில் மாத்திரமல்ல, இந்நாட்டு மக்கள் இவ் விலங்கையின் ஏனைய பாகங்களிலாக சிங்கப்பூர் மலாய்நாடு முதலாம் வேற்று நாடுகளிலாக, தத்தம் கருமார்த்தமாகச் சென்று சென்று வசிக்கும்போது அவர்களையும், அன்னைபோல் இன்னருள் பாலித்துக் காக்கின்றாயாமே! பெற்ற தாயைக் காட்டிலும் ஆயிரமடங்கு அதிகமாக நீ வைத்துள்ள கருணையைக் கண்டல்லவா வேற்றூர்களிலிருக்கும் உன்மக்கள் உனக்கு உற்சவம் நிகழுங் காலத்திலே தாங்கள் வசிக்கும் ஊர்களிலே இருந்துகொண்டு உன்னை நினைந்து உன் உற்சவ விரதத்தை அநுட்டித்து உன்னைப் பூசித்து வழிபட்டு வருகின்றார்கள். யுத்தம் நேர்ந்த காலத்தில் வேற்றூர்களில்வசித்த இந்தயாழ்ப்பாணத்து மக்களுக்கு வெடிகுண்டு முதலிய ஆபத்துக்கள் நேராமலும், அவர்களுக்குக் கொடிய யப்பானியர் பெரும்பிழை செய்யாமலும் ஆங்காங்கு நின்று அந்த அடியவர்களைப் பாதுகாத்தனை யென்று, அந்நாடுகளிலிருந்து இப்பொழுது மீண்டு இங்கே வந்தவர்கள் சொல்ல, தமியேன் காதாரக் கேட்டுள்ளேன்; அப்படியானல் ஆபத்காந்தவன் உன்னை யொழிய வேறு தெய்வமுண்டோ! இந்த இரகசியத்தை யுணர்ந்துதானே அக்காலத்திலே சங்கப் புலவனாகிய நக்கீரன்:—

"உன்னை யொழிய ஒருவரையும்
நம்புகிலேன்
பின்னை யொருவரை யான்
பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை
தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே'
என்று போற்றியுள்ளார்.

கலியுகந் தன்னிலே கண்கண்ட தெய்வமே! இந்நாட்டிலே இக் காலத்திலே சைவ சமயமும் வைதிக ஒழுக்கமும் குன்றப் பலவகையான விபரீதங்களுந் தீமைகளும் பரவத் தலைப்பட்டுள்ளன என்று இங்குள்ள சின்னன்பர் அஞ்சுகின்றனர்; இந்த நாட்டைப் பறங்கியர் ஒல்லாந்தர் ஆண்ட காலத்திலே, சமய வேற்றுமையினால் அந்த அந்நியர் நின் திருக்கோயிலையும் அழித் தொழிக்க, அருவமாக நின்று சைவத்தையும் வைதிக ஒழுக்கத்தையும் பாதுகாத்த நீ, இப்பொழுது விபரீதங்கள் [illegible]

பரவவிட மாட்டா யென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அப்படியேதும் விபரீதம் இந்நாட்டிலே வளருமானல், அதுவும் உன் மறக்கருணை யென்று உணர்ந்துகொண்டு, அவ்விபரீதம் நீங்கும் வண்ணம் உன்னைத் தினந் தொழுவதே மெய்யன்பர் கடனாகும். கதிர்காமம், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, கந்தவனம், இந்நல்லையம்பதி முதலாந் திவ்விய தலங்களிற் கோயில் கொண்டருளி ஆன்ம கோடிகளுக்கு அருள் புரியும் அறுமுகப் பரம்பொருளே! அருவாய வல்வினைநோய் அணுகா வண்ணம் அடியேமைக் [illegible] கடன் ஐயா!

# உண்ணாவிரதம் ஒழிந்தது

## சமூகத் தலைவர்களின் உத்தரவாதம்

மகாத்மா காந்தி, வங்காள வகுப்புக் கலவரத்தை ஒழிப்பதற்காக மேற்கொண்ட சாகும்வரை உண்ணாவிரதத்தை ஒழித்துவிட்டார். சென்ற இரவு 9 மணியளவில் ஹிந்து, சீக்கிய, முஸ்லீம் தலைவர்கள் அவரைக்கண்டு, சென்ற 24 மணித்தியாலங்களாக வகுப்புக் கலகங்கள் நிகழவில்லை என்றும், இனியும் வகுப்புக் கலகங்கள் நிகழாமலிருப்பதற்குத் தாங்கள் உத்தரவாதம் என்றும்கூறி, அவர் முன்னிலையிலேயே ஓர் உடன்படிக்கை எழுதி உறுதி செய்தனர். அதன்பின் காந்தியடிகள் எலுமிச்சம்பழ ரசம அருந்தினார்.

வங்காளப் பிரதமராயிருந்த ஜனுப் ஷுஹ்ரவர்த்தியே அந்த ரசத்தைத் தம் கையாற் கொடுக்க மகாத்மா வாங்கி அருந்தினர்.

மகாத்மா இனிப் பாஞ்சாலத்துக்குப் பிரயாணமாவர்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—29)

### பாக்கியலட்சுமி நாணமுற்றுள் சிவபாக்கியம் சினந்தாள்

நீடித்தநேரம் யோசித்துக்கொண்டிருந்த கண்ணகியம்மை அங்கே வந்த இராமனைப் பார்த்து "இராமன், எல்லாம் ஆண்டவனருளால் விதியின் வண்ணம் நடக்கும்; அந்த மனுஷன் இந்தப் பெண்ணுக்கு இப்படியான விலையுயர்ந்த பொன் பொருள் புடைவை யெல்லாம அனுப்பியபின்னரும், நாம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பிரித்துவைத்துக் கொண்டிருப்பது முறையல்ல; எல்லாரும் மனமொத்துச் செய்யும் சம்பந்தமே நலல சம்பந்தமாகும்; ஆனதால், நீ இப்பொழுதே அந்த ஐயாவிடம்போய், நாளை எந்தநேரம் சுபநேரமென்பதைக்கேட்டறிந்து கொண்டுவந்து சொல்லு" என்று சொல்ல, 'ஆம், ஆச்சி, அப்படியே போயறிந்துவந்து சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு இராமன், விஷயத்தை ஒருவாறு அயிர்த்துக்கொண்டானதலின், விரைவாகப் போய் அந்த ஆளைக்கண்டு விஷயத்தைச் சொன்னான்; அவர் சிரித்துக்கொண்டு "எதற்காகச் சுபநாள்' என்று கேட்க, இராமன் "நீங்கள் அந்தத் தங்கைச்சிக்குச் செய்த சந்மானத்திற்குப் பதிற் சந்மானஞ் செய்யப்போலும்" என்று செல்லிச் சிரித்தான்; அம்மனுஷன் மகிழ்ச்சியோடு உடனே பெட்டியைத்திறந்து பஞ்சாங்கத்தை யெடுத்துப் பார்த்து "நாளைப்பகல் 10 மணிவரையிலும் ஒரு சுபமுகூர்த்தமுண்டு இரவுஎட்டு மணிக்கு மேலும் ஒரு நல்லநாளுண்டு" என்று சொல்ல, ராமன் 'ஐயா, இதனை இப்பொழுதேபோய் ஆச்சியிடஞ் சொல்லிவிட்டு மீண்டு உங்களிடம் வருகிறேன்" என்றுகூறி மீண்டு கண்ணகியிடம்போய் இரு சுபநேரங்களையுஞ் சொன்னன் கேட்ட கண்ணகியம்மை இராமனையும் மக்களையும் பார்த்து "நாளைப் பகல் நாளுக்கு நடத்துவதோ, இல்லையேல் இராநாளுக்குச் செய்வதோ" எனலும், இராமன் "பகல்நாளுக்கே செய்யலாம்" என, பாக்கியலட்சுமி தலைகுனிந்தபடியிருப்ப, "என்னவிதமாக, அம்மா! செய்வது" என்று சிவபாக்கியங் கேட்டாள்; "செய்வதென்ன, மகளே, பிள்ளையாரைத் தியானித்துக் கும்பிட்டுக்கொண்டு சின்னத்தங்கைச்சியை அந்த மாப்பிள்ளை கையிலே மனச் சந்தோஷமாக ஒப்புவித்து விடுவதுதான்" என்றாள் கண்ணகியம்மை: "அதனால் ஒரு குறையுமில்லையா, அம்மா" என்று சிவபாக்கியம் பின்னருந் தாயைக் கேட்க "இல்லை, மகளே, மனமொத்த சம்பந்தந்தான் சந்தோஷமான வாழ்க்கையைத் தரும்" என்று சொல்ல மகளும் தாய் சொல்லை ஏற்றுக்கொண்டாள்; அதன் பின்னர் கண்ணகியம்மை இராமனைப் பார்த்து 'இராமன் நீ இப்பொழுது அந்த ஐயா இருக்குமிடத்திற்குப் போகவில்லையோ" என்று வினவ "போகச் சொன்னாற் போகிறேன; போய் ஏதுஞ் சொல்லச் சொன்னாற் சொல்லுகிறேன்" என்றான் இராமன். "நீ அந்த ஐயாவிடமபோய், நாளைப் பகல் 10 மணி வரையில் இங்கே வந்து தங்கைச்சியை ஏற்றுக்கொள்ளும்படி நான் சொன்னதாகச் சொல்லு" என்று கண்ணகியம்மை செல்லுதலும், இராமன "எந்தத் தங்கைச்சியை ஏற்பது" என்று கேட்க, பாக்கிய இலட்சுமி நாணமுற்றுள், சிவபாக்கியஞ் சினந்தாள்; "இராமன், நீ வேறொன்றுஞ் சொல்லவேண்டாம்; தங்கைச்சியென்றால் எந்தத் தங்கைசியென்பது அந்த ஐயாவுக்கு விளங்கும்; நீ மற்றத்தங்கைச்சியைப்பற்றி ஏதுஞ் சொல்லிவிடாதே மற்றத் தங்கைச்சி இங்கே இருப்பதுதானும அந்த ஆளுக்குத் தெரியாது; ஒருபோது பெரியதங்கைச்சியைப் பற்றி நீ ஏதும் அந்த ஆளுக்குச் சொன்னதுண்டோ" என்று பதைப்புடன் கண்ணகியம்மை கேட்கநான், ஏன அம்மா சொல்லப்போகிறேன்? நான் என்ன புத்தியிற் குறைந்தவனா" என்று சொல்லிவிட்டு இராமன் அந்த ஆளிடம போனன் "என்ன விசேஷம்" என்று அங்கே வந்த இராமனை அந்த ஆள் வினவுதலும், "இனி எல்லாம் விசேஷந்தானே; நாளைப் பகல் பத்து மணியாம் உங்களிருவருக்கும் நிச்சயிக்கப்பட்ட விவாக முகூர்த்தம்; அது உங்களுக்கும் உடன்பாடுதானே என்று ஆச்சி கேட்டுக்கொண்டுவரச் சொன்னமையினால் இங்கு வந்தேன்; அது நல்ல நேரமென்றுதான் நானும் நினைக்கிறேன்" என்றான் இராமன. "உங்களெல்லோருக்கும் நல்ல நேரமாக இருந்தால், அது எனக்கும் நல்ல நேரந்தானே" என்று அந்த ஆள் சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டு, இராமன் பின்னரும் சில நிமிஷம் அங்கேயிருந்துவிட்டு மீண்டு வந்து கண்ணகியம்மைக்கும் மக்க

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிமாலய யோகி சிவானந்தர்

## தமிழன்னையின் தவப் புதல்வன்

### சஷ்டி பூர்த்திவிழா 7-9-47

( க. இராமச்சந்திரன், கொழும்பு )

மோனமாங் கைலாயத்தின் முகட்டிவாற் றெடுத்துவேத
கானத்தோ டிறங்குங் கங்கைக் கரைதனில் தவத்தமர்ந்தே
தீனரைக் காப்பதற்காய்த் திவ்ய ஜீவியத்தைக் காட்டி
ஞானமு தளிக்குஞ்சுத்த சிவானந்தர் திருத்தாள் போற்றி.

சுவாமி ஸ்ரீ சிவானந்தரின் மணிவிழா 7-9 47 தொடக்கம் ஒருவாரம் இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் கொண்டாடப்படும், தமிழனாகிய இப்பெரியாரின் வரலாறு தமிழ்நாட்டினர்க்குத் தெரியாது. இத்துடன் சுருக்கமாய் அதைத் தருகிறோம்.

சிவானந்தர் என்றதும் எவர்க்கும் இமயத்தின் நினைவே முதலில் வரும். இம்மகானின் தோற்றம் உண்மையில் இமாசலத்தைப்போலவே கம்பீரமானது; அவர் வதியும் ஆனந்தக் குடிலும் இமாசலத்தின் அடிவாரத்திலேயே அழகுபெற அமைந்துள்ளது. பலருக்கு அவர் பிறப்பால் தமிழன் என்பதே தெரியாது. இவரது ஆத்மீக சேவை பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருக்கும் காரணமும் இவர் ஓர் அசல் தமிழன் என்ற உண்மையை மறைத்துவிட்டதெனலாம்.

அவர் பிறந்தது சோமா தேவிக்கு அருகாமையிலுள்ள பத்தமடைக் கிராமத்தில்; வளர்ந்தது புலவர்பதியான எட்டையபுரத்திலாகும். தேசியகவி சுப்பிரமணிய பாரதியார், உமார் புலவர், முத்துசாமி தீட்சிதர் முதலாம் பெரியார்களின் பிறப்பிடமாகிய எட்டையபுரம் இன்று உலகப் பிரசித்தம் அடைந்துள்ளது. அந்த ஊரில் தாசில்தார் உத்தியோகம் பார்த்த வெங்குவையரே சிவானந்தரின் தந்தையராவர். சதா 'ஓம் நம: சிவாய' என்று செபஞ்செய்த வண்ணம் அரிய ஞானத் தொண்டாற்றி, ''சித்தாந்த சாரம்' 'வேதாந்தகேசரி' எனப் புகழ் படைத்த அப்பைய தீட்சிதரின் நேர்சந்ததியைச் சேர்ந்தவராவர் அவர் வடமொழியில் ஆறு மடைதிறந்தாற்போல அரிய ஞான நூல்களை வரைந்து மறைந்த தீட்சிதரே, உலகுக்கு உய்யும் வழிகாட்டும் கருணை நோக்கால், சிவானந்தராக அவதரித்து, காலத்துக்குப் பொருத்தமான சமரச முறையில் உலகமொழியான ஆங்கிலத்தில ஞானவாரிதியாக விளங்குகிறாரெனப் பலர் கருதுகின்றனர். சிவானந்தரின் அற்புதசக்தியையும், அபார தொண்டையும் அபார உழைப்பையும் அறிந்தவர்கள் இதில் அணுவேனும் ஐயுரார்.

கீதை காட்டும் வெவ்வேறு யோக மார்க்கங்களில் சர்வ சித்தனாக இன்று விளங்கும் சிவானந்தர் பிறந்தது சர்வசித்து ஆண்டு ஆவணி மாதம் பரணி நட்சத்திரத்தில் (8-9 1887) வேதாந்தகேசரியான இவரின் ஜென்ம லக்கினமும் சிங்கமே ஞானதீரனான இப் பரமபுருஷனின் சாதகத்தில், தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்கள் மூன்றும் அக்கினித் தத்துவமாய்ப் பொருந்தியது ஓர் அற்புத யோகமாகும் இவர் ஆத்மீகத் துறையில் ஏனைய மகான்கள்போல் தனிமோன நிஷ்டையில் சஞ்சாரகிதராய் வதியாது, நிஷ்காமிய கர்மயோகியாய் அயராது உழைப்பதை இந்த யோகம் நன்கு விளக்குகிறது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை அவருக்கு அறுபது ஆண்டு நிறைவாகின்றது இச் சஷ்டியப்த பூர்த்தியானது அவரது பக்தகோடிகளால் இந்தியாவில் நூற்றுக்கணக்கான இடங்களில் மணிவிழாக் கொண்டாடப்படும். அதற்கு வேண்டிய ஒழுங்குகளெல்லாம் ஓராண்டுக்கு முன்னரேயே நிச்சயிக்கப்பட்டன

சிவானந்தரின் பூர்வாச்ரம நாமதேயம் குப்புசாமி ஐயர். எட்டையபுரம் அரசர் கல்லூரியில் மற்றிக்குலேஷன் வரைக்கும் கல்விகற்று, பதினாறவது வயதில் திருச்சினாப்பள்ளி S. P. G. கல்லூரியில் சேர்ந்து F. A. படிக்கும்போது தந்தை இறந்துவிட மேற்கல்வி தடைபட்டது பரோபகார சிந்தைபடைத்த குப்புசாமிக்கு பணத்திற்காகவல்லாமல் பணிக்காகத் தொழில்பார்க்கவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. அந்த லட்சியத்திற்கு டக்ரர் உத்தியோகமே சிறந்ததெனத் தோன்றவே, மூன்று ஆண்டுகள் வைத்தியக் கல்விபயின்று முதற்றரமான சித்திபடைந்தார். பின்னர் அவரை டக்ரர் குப்புசாமியாகப் பத்து ஆண்டுகள்மேல் காண்கிறோம். ஜோகூரில் சிங்கப்பூரில் உத்தியோகம் பார்த்த ஈழத்தமிழ் மக்கள் பலரின் நினைவில் இன்றும் டக்ரர் ஐயரின் ஞாபகம் உண்டு. கருணை உள்ளம் படைத்த இப்பெரியாருக்கு வைத்தியத்தொழிலில் நல்ல சித்தியும் புகழும் வந்தது வியப்பல்ல. உத்தியோகத்தில் எஞ்சிய நேரத்தை சிவநாமசெபத்திலும், ஞானநூலாராய்ச்சியிலும, பத்திரிகைகட்குக் கட்டுரை எழுதுவதிலுங் கழித்தனர். முப்பத்தாறுவது வயசில் உலக வாழ்வில் உவர்ப்புத் தோன்றி, உத்தியோகத்தைவிட்டு, கப்பல் மார்க்கம் சென்னை சேர்ந்தார். அங்கே ஓர் அன்பரிடம் தமது உடுப்புகளும் ரொக்கப்பணமும் (ரூபா 4000) அடங்கிய பெட்டியைக் கொடுத்துவிட்டு வெறுங்கையுடன் யாத்திரை தொடங்கினர். ஞானத்த போதனரை வாவென்று அழைக்கும் மலையான திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீரமண மூர்த்தியின் தரிசனம் பெற்றுக்கொண்டு, வடக்கு நோக்கி காசிமார்க்கம் ரிஷிகேசத்தை அடைந்தார். அங்கே சிருங்கேரி சங்கர மடத்தைச்சேர்ந்த சுவாமி விச்வானந்த சரஸ்வதி அவர்களைச் சந்தித்து அவரிடமிருந்து சன்னியாசமும், 'சிவானந்த சரஸ்வதி' யென்ற தீக்ஷாநாமமும் பெற்றார்.

சுவர்காசிரமத்தில் தங்கியபோது பத்திரி நாராயணம், திருக்கேதாரம் செல்லும் யாத்திரிகர்கள் நோய்வாய்ப்பட்டு வருந்துவதை நேரிற் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. உடனே சென்னையில் அன்பரிடம் விட்ட பணத்தை வரவழைத்து அதை மூலநிதியாகக் கொண்டு மருந்துகள் வாங்கி அருஞ் சேவை செய்தார். அத்தோடு நின்றுவிடாமல், நாம சங்கீர்த்தனத்தாலும், ஞான உபதேசங்களாலும் வெறும் பிக்ஷா ஆண்டிகளாய் அலையும் பலரை உண்மைச் சாதுக்களாய், மெய்யடியாராய் மாற்றுந்தொண்டில் பெரிதும் உழைத்தார். பின்னர் நான்கு ஆண்டுகளாய் கால் நடையில் கன்னியாகுமரியிலிருந்து கைலாயம் வரையும் யாத்திரை செய்து முடிவில் ரிஷிகேசத்திற்குத் திரும்பி அங்கே நதிக் கரையில் ஓர் சிறு குடில் அமைத்து, தனி மோனதவத்தில் அமர்ந்தார். 1936 ம் ஆண்டில் அவர் தரிசனங்கோரி யாம் சென்றபோது அவர் மாலையில் நாற்பத்தைந்து நிமிஷங்கட்கே வெளிவந்து அன்பர்கட்குக் காட்சி அளிப்பது வழக்கமாய் இருந்தது அதே ஆண்டில் தெய்வநெறிக் கழகம் நிறுவியதும் அவரது தனி மோனதவம் முடிந்து விட்டதெனலாம். இத் தேவ ஜீவன சபையானது (The Divine Life Society) உலகுக்கு வேதாந்தம், சித்தாந்தம், யோக மார்க்கங்கள் முதலியவற்றை சுத்த சமரச முறையில் போதிக்கும் ஓர் சர்வகலாசாலை போல் அமைந்துள்ளது. அதின் கிளைகள் இந்தியாவின் நாலாபக்கங்களிலும், ஐரோப்பாவில் பல இடங்களிலும், பாவி லட்சக் கணக்கான மக்களுக்கு ஆத்மப் பசி தீர்க்கின்றது.

இதுவரையில் சுவாமி சிவானந்தர் இங்கிலாந்தில் வரைந்துள்ள நூல்கள் பாடல்கள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்கள், சாசனங்கள் எல்லாம் ஓர் தனி வாசிகசாலைக்குப் போதுமானவை. இத் தொண்டிற்கு இணையாக சுவாமி சுத்தானந்தர் தமிழில் செய்யும் பணி ஒன்றையே [illegible]

பின் இவ்விரு மகான்கள் மாத்திரமே அவ்வித அபாரமான எழுத்துப் பணி செய்தார்கள் எனக் கூறுதல் மிகையாகாது. சிவானந்தர் ஆங்கிலத்தில் எழுதினாலும் நடை மிக மிக எளியது. பாலரும் படித்துப் பயன் பெறும் முறையில் ஆழ்ந்த அத்யாத்ம விஷயங்களை அவர் அன்னிய மொழியில் விளக்குவதானது அற்புதத்தில் அற்புதமேயாம்.

''உங்கள் யாவருக்கும் பணியாற்றவே யானுள்ளேன். உங்களது வாழ்நாளை இனிதாக்கி, இன்புற வாழச் செய்யவே யானுளேன். அறியாமையை அகற்றி பிறவிப் பயனை அடைவதற்கு ஏற்ற பாதையில் துணைபுரியவே யானுளேன்''

''ஆத்ம வேட்கை மிக்குள்ள அன்பர்களுக்கு அரும்பணியாற்றுதலொழித்து வேறொரு அரியகடவுளும், புனிதபூசனையும் எனக்கில்லை. அவர்களுக்குத் துணையாக இருந்து உதவிபுரிதலே எனது மேலான யோகம்-யானமைந்த அருளொளி''

இதுவே சுவாமி சிவானந்தரின் லட்சியமாகும்.

ஓம் சுத்தசத்தி! ஓம் சிவஜோதி!

## 175 வயதுவரை சீவிக்கலாம்

### ருஷிய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி

மனிதர் சுகஜீவிகளாக 125 வருஷம் வரையல்ல 175 வயது வரைக்கும் வாழலாம் என்று ருஷிய விஞ்ஞானிகள் இப்போது திடமாக நம்புகின்றனர்.

ருஷியத் தலைநகரான மொஸ்கோவில் மனித தேக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள டக்ரர் உஷிரினேவ் என்பவர், மனிதரின் வயோதிபத்துக் கேதுவான சில கோளங்களைத் தேகத்திலிருந்து அகற்றலாம் என்றும், அப்படி அகற்றிவிட்டால் மனிதர் நெடுங்காலத்துக்கு நரை,திரை,மூப்பின்றியிருக்கலாம் என்றும் கூறுகிறார்,

மேலே சொல்லப்பட்ட வயோதிப கோளங்கள் குழந்தைகளில் இல்லையாம். குறித்த ஓர் வயதுக்கப்பாலேயே மனிதர் சரீரத்திலுண்டாகின்றன. அவற்றை அகற்றிவிட்டால் மனிதர்க்கு வயோதிபம் ஏற்படமாட்டாது என்று மேற்படி நிபுணர் அறிஞர் அறிவிக்கிறார்.

## பொழுது புலர்ந்தது! தூக்கமா?

### சைவமக்கள் முன்னிற்கும் பணி

(திரு. சங்கு–சாது)

நாவலரும் ராமநாதனும் தோன்றித் தொண்டாற்றின நாடு நமது நாடு. சைவத்தையும் செந்தமிழையும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தோன்றிய பின் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி எமது நாட்டுச் சைவப் பெரியோர்கள் தனிமுறையிலும் கூட்டுறவு முறையிலும் நாடெங்கணும் பல சைவப் பாடசாலைகளை ஸ்தாபித்துச் செவ்வனே நடாத்திவருகிறார்கள் சைவ பரிபாலன சபையின் பெருமுயற்சியால் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் இந்துக் கல்லூரியாரின் விடாமுயற்சியால் பல கிளைப் பாடசாலைகளும் ஏற்படலாயின சைவ வித்தியா விருத்திச் சங்கமொன்றே தன்னகத்தில் 125 பாடசாலைகளை வைத்து உயரிய முறையிற் பரிபாலித்து வருகின்றது, அப்படியெல்லாமிருக்க நாம் எமது அருமருந்தனைய சைவப்பிள்ளைகளை அந்நிய மதப் பாடசாலைகளிற் கல்வி கற்கவிட்டு வருகிறோம். அவற்றுள்ளும் எங்கள் வருங்கால அன்னையர்களையுமா அந்நிய மதப் பாடசாலைகளிற கல்வி கற்கவிடுவது? திக்கற்ற அநாதைப் பெண்களுக்குச் சைவ இலவச விடுதிப் பாடசாலைகளில்லாததினால் இப் பெண் குழந்தைகள் அன்னியமத மடங்களிற் சேர்ந்து கல்வி கற்றுவருகிறார்கள். சைவ வைத்திய சாலைகளில்லாமையினால் சைவ மக்கள் அன்னிய கிறீஸ்தவ வைத்தியசாலைகளிற் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

சைவ மதத்தை இகழ்ந்து கிறீஸ்தமதத்தைப் புகழ்ந்து வரும் அந்நியர்களால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளிலுமா எமது மக்கள் கல்வி பயிலுவதும் சிகிச்சை பெறுவது ? தூரதேசத்தவர்களால் வைத்து நடாத்தப்படும் ஸ்தாபனங்களில் நாம் சேவை பெறுவது பெரும்மூடத்தன்மை எயன்றுணரும் ஆற்றல் இன்னும் எமக்கு எழவில்லையே! எங்கள் நரம்புகளில சுய உணர்ச்சிரத்தம் ஓடிக்கொண்டிருந்தால்நாம் அடிமை வாழ்வை விரும்புவோமா?எங்கள் பாலர்கள் இளமையிலிருந்தே அந்நிய மதத்திற் பழகி வருவார்களாயின் பின் அவர்கள் தங்கள் காலத்தில் நமது மதாசாரத்தை நம்புவார்களா? பின்பற்றுவார்களா? பைபிளையே நம்பினவர்கள் தங்கள் புத்திர பௌத்திர மித்திரர்களுக்கும் அதையே போதித்து நமது உண்மைத் தெய்வ மதத்தை இகழ்ந்து தூஷித்தும் வருகிறார்கள். ஆடவரும் மகளிரும் வயிற்றுப் பிழைப்புக்காக அன்னிய மதத்திற்சேர்ந்து படித்துப் பின் நமது ஆதியாய மதத்தின் உண்மைகளைச் சிறிதும் ஆராயாமல் அவர்கள் சொல்லிக் கொடுக்கும் தூஷணைகளை மாத்திரம் கற்றுக்கொண்டு எங்கள் மதத்தை வாய்கூசாது இகழ்ந்து வருவது கண்கூடு. இப்படி வருமாயின் கோயிலுக்குப் போவார் யார்? வைதிக அனுஷ்டானம் எமது ஊரில் தலைகாட்டுமா?

பெண்கல்வியானது இல்லறத்தை நல்லறமாக நடத்தவும், பிள்ளைகளை நல்லவர்களாக வளர்ப்பதற்கும், சமையல், தையல் வீட்டுவேலைகளைச் செய்வதற்கும், சுகாதார முறைகளையறிந்து நடந்துகொள்ளத் தக்கதாயுமிருத்தல் வேண்டும். பெண்கள் கற்கும கல்வி அவர்கள் கற்புக்கு எவ்விதத்தாலும் பங்கம் வருவிக்காத முறையுடையதாயிருத்தல் வேண்டும். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் வலிய அரண்களை அழியாததாய் இருத்தல்வேண்டும். தாய் மொழியிற் பற்றுடைமை வேண்டும். இவையனைத்தையும் மேலைத்தேசத் தற்கால நாகரீகத்தைப் பின்பற்றி நடாத்தப்பட்டுவரும் புறச்சமயப் பாடசாலைகளால் அனுட்டிக்க முடியுமா? அந்நிய நாகரீகத்தையும் பழக்க வழக்கங்களையும் உடை நடை பாவனைகளையும் பின்பற்றும் அந்நிய மதப் பாடசாலைகள் எம்மவர்க்குப் பொருத்தமுடையனவா? சுருங்கச் சொல்லி விளங்க வைக்கில், எமது கல்வி முறை ஆடவருக்கெனினும் மகளிர்கட்கெனினும் மேற்கூறிய அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்த நிலைக்கும் பயனளிப்பதாயிருத்தல் அவசியம்.

எங்கள் மக்களுக்கு எமது வேண்டுகோள் என்னவெனின் நாமும் ஒரு பழமையான நாகரிகத்தையும் மதத்தையும் நாட்டையும் சேர்ந்தவர்களென்றதையும் உலகத்தில் முதன் முதல் தோன்றி சேரன் சோழ பாண்டிய வேந்தர்களால் வளர்க்கப்பட்ட மொழியைப் பேசுகிறவர்களென்றதையும் எமக்கும் சுய உணர்ச்சியிருக்கின்றதென்பதையும் ஒரு நிமிடமேனும் மறக்கக்கூடாது. ஆகவே எமக்குச் சுய உணர்ச்சி ஏற்பட்டால் எமக்கு வேண்டிய சுயமதப் பாடசாலைகளையும் வைத்திய சாலைகளையும் நாமே ஸ்தாபித்துச் செவ்வனே நடாத்த வேண்டியது. காலத்திற் கேற்றவாறு எமது போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் மக்கள் ஆடவரும் மகளிரும் தாய்மொழியாகிய செந்தமிழை மாத்திரமன்றிச் சிங்களத்தையும் கற்கவேண்டும். தமிழைத் தமிழரல்லாதார்க்குங் கற்றுக்கொடுக்கவேண்டும், ஆங்கிலத்திற்கு மூன்றாமிடமே கொடுபடல் வேண்டும்.

இன்னும் நமக்குள் விழிப்பு வரவில்லை. கிறீஸ்தவர்களோ, நாம் ஆழ்ந்த தூக்கத்திற் கிடக்கும் இந்த நேரத்தைப்பார்த்து. எமது மத சித்தாந்த மறியாத பேதைகளைத் தங்கள மதத்திற் சேர்க்கும் வேலையை விடாது மும்முரமாய்ச் செய்துவருகிறார்கள். பொழுது புலர்ந்து வெகுநேரமாயும் நாம் இன்னும் கண் விழிக்காமல் தூங்கிக்கொண்டிருக்கிறோம். இன்றல்லவோ எமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப் போன்ற ஓர் பெரியார் அவசியந் தோன்றவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

**சனி செப்டெம்பர் 6**

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே ஏ வெங்கடேஸ்வரன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வி ஜானகிராமன் வயலின் 8-30 சித்திரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 ஜானகிராமன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வ கலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வ கலாசாலைகளுக்கு 2 15 கே ஏ வெங்கடேஸ்வரன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 கே கல்பகம் பாட்டு 5-40 ஆண்டாள் பாசுர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே கல்பகம் பாட்டு 7-15 நாட்டு வைத்தியம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி பிருந்தா, டி முக்தா, பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வர்ணக் கயிறு தொடர்கதை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9.45 தில்ருபா கோட்டுவாத்தியம் 10 இசைவேளை இசைத்தட்டு 10.30 முடிவு.

**ஞாயிறு செப்டம்பர் 7**

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் ஆர் சிவராமன் நாயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 எஸ் பத்மா பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 ஆர்க்கும் முரசு முகப்புச் சித்திரம் 12-35 யார் இவர் 12-4 பெற்றமனம் இசை நிகழ்ச்சி 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பாலக்காடு கே வி நாராயணசாமி ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2.05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 சங்கரி அம்மாள் வீணை 5-40 தேவாரங்களை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சங்கரி அம்மாள் வீணை 7.30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 எம் ஆர் சிவராமன் நாயர் பாட்டு 8-30 எஸ் பத்மா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 லாவணியா இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி ஜி சங்கரகோபாலன் புல்லாங்குழல் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு

**திங்கள் செப்டம்பர் 8**

காலை 7-15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 ஏ சிட்டிலிங்கம் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 சிதம்பரம் எஸ் செல்வரத்தினம் பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருவிழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 திருவிழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 ஏ சிட்டிலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவிழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 7-15 சித்திரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 கிராம நிர்மாணத் திட்டம் 8 கீதகோவிந்தம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 கே வி காளிதாஸ் பாட்டு 10 வாத்ய இசை இசைத்தட்டு 10-15 எஸ் ஜீ கிட்டப்பா இசைத்தட்டு 10 30 முடிவு.

**செவ்வாய் செப்டம்பர் 9**

காலை 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 எம் சுலோசனா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல வகை இசைத்தட்டு 8-30 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 எம் சுலோசனா பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7-15 இலக்கிய வாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி ராஜகோபால பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 மதுரை மணி ஐயர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி எஸ் வெங்க[illegible] 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

# ஓர் பேராபத்து

## மிஸ்ரர் சேனநாயக்கா எச்சரிக்கிறார்

இலங்கைக்கு ஓர் பேராபத்து வர இருக்கிறது. இந்த ஆபத்தினின்றும் தப்ப இலங்கை மக்கள் அனைவரும் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐ. தே. க. தலைவர் மிஸ்ரர் சேனநாயக்கா சென்ற திங்கட்கிழமை ரத்தினபுரியில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினார்.

அடுத்த பெப்ரவரிமாதத்தில் இலங்கைக்குப் பூரணசுதந்திரம் கிடைத்துவிடும்; அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாத்து, உலகநாடுகள் மத்தியில்சமத்துவத்துடன் இலங்கை மிளிரவேண்டுமானால், இலங்கை மக்கள் அனைவரும் இப்போதே தம் கடமையையுணர்ந்துகொள்ளவேண்டும் என்று மிஸ்ரர் சேனநாயக்கா கூறி மேலும் தெரிவித்ததாவது:

"இந்தச் சுதந்திரம் சும்மா வந்துவிடவில்லை. இந்தநாட்டுத் தேசாபிமானிகள் செய்த தியாகத்தின் பயனாகவே இதனைநாம் அடையப்போகிறோம். ஆனால் இச் சுதந்திரத்தைப் பங்கப்படுத்த, இதனால் வரும் பயனை மக்கள் அநுபவிக்காமற் செய்ய மூன்று கட்சிகள் இந்த இலங்கையிலே நவமாக முளைத்திருக்கின்றன.

'இந்த நவமான கட்சிகள் தம் பொய்ப் பிரசாரத்தினால் பொது ஜனங்களை ஓரளவுக்கு ஏமாற்றி, கொஞ்ச வெற்றியையும் பெற்றுள்ளன.

"சமத்துவம், சகோதரத்துவம் என்றெல்லாம் இடதுசாரிக்கட்சியினர் பேசுகின்றனர். காணி நிலங்களை எல்லாம் சமமாகப் பங்கிடப்போகிறார்களாம். அப்படிப் பிரித்தால், இலங்கையில் உள்ள ஒவ்வொருவனுக்கும் சராசரியாக அரை ஏக்கர் நிலம்தான் கிடைக்கும். இதனைக்கொண்டு ஓர் முடியானவன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிக்கமுடியுமா? எல்லாமக்களும் இன்புற்றிருக்க நாம் வழிதேடவேண்டும்.

"வானத்தை வில்லாக வளைப்பாம், மணலைக் கயிறாகத் திரிப்போம், பூலோகத்திலேயே சொர்க்கலோகத்தைத் தாபிப்போம் என்றெல்லாம் இடதுசாரிகள் இன்று கூறுகிறார்கள். இவை எல்லாம் நடைபெறும் காரியங்களா? இலங்கை சுயராஜயத்தின் உண்மைப்பயனை அநுபவிப்பதற்கு இடதுசாரிகள் இன்று இடையூறாக இருக்கிறார்கள்"

## தேகவியோகம்

**இராமநாதர் கணபதிப்பிள்ளை**

மாதகல் பிரபல வீர சுந்தர முதலி குடும்பத்தைச் சேர்ந்தவரும், கடந்த 56 வருடங்களாக சுண்டிக்குழியை வாசஸ்தானமாகக் கொண்டவரும், சின்னக் கடை குத்தகைக்காறரும் பிரபல வர்த்தகருமாகிய திரு இராமநாதர் கணபதிப்பிள்ளை அவர்கள், சென்ற 28—8—47 இரவு 11½ மணி வரையில் தேகவியோகமாகினர்; இறக்கும்போது வயசு. 74. இவரது ஈமக் கிரியைகள் இவரது புத்திரர் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியராகிய திரு. இராமநாதன் அவர்களால் 30—8—47 இல் துண்டி மயானத்திற் சிறப்பாக நடத்தப்பட்டன.

**தானவரவு**

இவருடைய ஈமக் கிரிகையின் போது புதல்வராகிய திரு இராமநாதனவர்களால் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 5 வரப்பெற்றும்.

மனேஜர்

# பாஞ்சாலக் கலகம்

## இன்னும் ஓயவில்லை

பாஞ்சாலத்துக் கலகம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. கிழக்குப் பாஞ்சாலத்திலிருந்தும் மேற்குப் பாஞ்சாலத்திலிருந்தும் அகதிகள் போவதும் வருவதுமாயிருக்கின்றனர். இப்படியாக இதுவரை 10 லட்சம் ஜனங்களுக்குமேல் தம் வீடு வாசல்களை யிழந்து தவிப்பதாகத் தெரிகிறது. பாஞ்சாலக் கலகம் இப்போது வங்காளத்திற்கும் பரவிவிட்டது. மேற்குப் பாஞ்சாலத்திலே முஸ்லீம்கள் ஆற்றும் அட்டூழியங்களைக் கேட்டுள்ள சீக்கியரும் ஹிந்துக்களும் கல்கத்தாவில் பெரும் ஆத்திரங்கொண்டனர். மகாத்மா காந்தி பாஞ்சாலத்தில் அவதிப்படுவோரின் நிலைமையைக் கவனிக்காமல், வங்காளத்து முஸ்லீம்களுடன் நேசபான்மை கொண்டு சமரசப் பிரசாரம் செய்துவந்தமை இவர்களிற் சிலருக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. சென்ற திங்கட்கிழமை மகாத்மா வசித்த குடிசைமீது கற்கள் வீசப்பட்டன. ஓர் கல் மகாத்மாவுக்கருகே வீழ்ந்தது. அவர் அகஸ்மாத்தாகக் காயப்படாமல் தப்பினார். அத்துடன் இதுவரை சமாதானம் குடிகொண்டிருந்த கல்கத்தாவில் கலகம் மூண்டு உடனே 60 பேர் கொல்லப்பட்டனர். தம்முடைய சமாதான முயற்சி இப்படி முடிந்ததைக் கண்ட மகாத்மா காந்தி மனமுடைந்து, சாகும்வரை உண்ணாவிரத மிருக்கத் தீர்மானித்துக் கொண்டார். ஹிந்துக்களும் சீக்கியரும் முஸலீம்களும் இனிக் கல்கத்தாவில் கலவரம் நிகழாதென்று உத்தரவாதம் அளிக்கும் வரை உண்ணாவிரதத்தைக் கை விடுவதில்லை என்று மகாத்மா நிச்சயித்து விட்டார்.

**மகாத்மா உபவாசம்**

சென்ற திங்கட்கிழமை ஆரம்பித்த உபவாசத்தை மகாத்மா இதுவிரை கைவிடவில்லை. இன்னும் சிலநாட்களில் உபவாசம் நீடிக்குமானால் அவருக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர் தேகநிலைமையைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயம் கூறுகின்றனர். சென்ற செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்குப் பின் கல்கத்தாவில் வகுப்புக் கலகங்கள் நிகழவில்லையென்று தெரிகிறது.

**ராஜாஜியின் வேண்டுகோள்**

மேற்கு வங்காளத் தேசாதிபதி ஸ்ரீ ஜ. இத் ராஜகோபாலாச்சாரியார், மகாத்மாவின் உண்ணா விரதம் சம்பந்தமாகப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

'நான் காந்திஜியை சந்தித்துவிட்டு இரவு 11½ மணிக்குத் திரும்பினேன். உண்ணா விரதத்தைக் கைவிடும்படி நான் மகாத்மா காந்தியை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேன். ஆனால், எனது வேண்டுகோள் பயனளிக்கவில்லை. கடந்த 16 நாட்களாக இந் நகரில் நிலவியிருந்த அமைதியின் அழகு இன்று நடந்த சம்பவங்களால் சீர் குலைந்துவிட்டது. பஞ்சாப் மக்கள் காந்திஜியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அவர் அங்கு செல்லவேண்டுமானால், அவர் உண்ணா விரதத்தை நிறுத்த நாம் அனைவரும் மீண்டும் அமைதியை நிலைநாட்டவேண்டும். நம் சீக்கிரத்தில் வெற்றி மாலையுடன மகாத்மாஜியைப் பாதிக்கப்பட்டிருக்கும் பாஞ்சாலத்துக்கு அனுப்பிவைப்போமாக"

# இடதுசாரிகளின் நிலைமை

## ஒற்றுமையின்மையால் கேவல நிலை

இன்று இடதுசாரிகள் சில தொகுதிகளில் வெற்றியுறவதிற் சிலர் பெருமைப் படுகிறார்கள். ஆனால், இந்த இடதுசாரியினர் தமக்குள்ளே தலைமைப்பதவி காரணமாகக் கொண்டுள்ள வேற்றுமையினால் ஒற்றுமைப்படமாட்டார்கள். இந்த ஒற்றுமையீனத்தினால், அவர்கள் தங்கள் லட்சியத்தை யடைய முடியாது என்று கடுகண்ணாவைத் தொகுதிக்கு ஓர் அபேட்சகராக முன்னிற்கும் மிஸ்ரர் ஈ. ஏ. நுகவெல என்பவர் சென்ற திங்கட்கிழமை ஓர் சொற்பொழிவிற் குறிப்பிட்டார். இக் கூட்டத்திற்கு மிஸ்ரர் சேனநாயக்காவும் சமுகமளித்தனர்.

தமது சொற்பொழிவில் மிஸ்ரர் சேனநாயக்கா குறிப்பிட்டதாவது:

"எங்கள் சிங்கக்கொடி ஓர் காலத்தில் மிகவும் உன்னத நிலையில் சோபிதமாகப் பறந்தது. அந்தக் கொடிக்குப் பதிலாக இன்று இடதுசாரிகள், ருஷியாவின் சம்மட்டிசத்தகக் கொடியை இங்கே நாட்டப் பார்க்கிறார்கள் எங்கள் நாட்டிற்கு வருகிற பெப்ரவரி மாதத்துக் கிடையில் பூரண சுயராச்சியம் கிடைக்கும் என்பதை நான் உத்தரவாதமாகக் கூறுகிறேன்".

## சைவ பரிபாலன சபை 59 வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து ஞு புரட்டாசி மீ 5 உ (21.9-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் சபையங்கத்தவர்களாயுள்ளவர்கள் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றித் தனாதிகாரியிடம் செலுத்தவேண்டும். சந்தாப் பணம் நிலுவையுள்ளவர்கள் கூட்டத்தில் வாக்குரிமைக்கு அருகரல்லர்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி
சைவபரிபாலனசபை

11—8—47
யாழ்ப்பாணம்.

Mis 115 19 8.47 —29.9-47


## வீமாக்கம்பனி விளம்பரம்

**நாஷனல் மியூஜ்வல் லைவ் அஸோசியேஷன், அவுஸதிரேலியா.**
(விக்ரோறியா, அவுஸ்திரேலியா என்னும் ஊர்களிற் பதிவுசெய்யப்பட்டது)

யாழ்ப்பாணம், அரசினர் வைத்தியசாலை, கந்தையா வைத்தியலிங்கம் வைத்தியேசுவரன் என்பவருடைய 73|561 ம் இலக்கங்கொண்ட சீவிய வீமாப் போலிஸிப் பத்திரம் எங்கோ தவறிவிட்டமையினால், இந்த செப்டெம்பர்மூ 5ந் உ தே டக்கம் ஒரு மாசம் முடிந்தவுடன், இழந்த போலிஸிப் பத்திரத்துக்குப் பதிலாக ஒரு பிரதி போலிஸிப் பத்திரம் டை வீமாச் சங்கத்தினராற் பிறப்பிக்கப்படுமெனவும், யாராயினும் தடைகாரரிருந்தால் குறித்த ஒரு மாசம் முடிவதற்கிடையில் தங்கள் தடையை. கொழும்பு, சதாம்தெரு, நாஷனல் மியூஜ்வல் கட்டிடத்தி லுள்ள தங்கள் உத்தியோகஸ்தானத்து அதிகாரிகட்கு விண்ணப்பஞ் செய்யவேண்டுமென்றும் மேற்படி வீமாச்சங்கம் சகலபேருக்குந் தெரிவிக்கின்றது.

கொழும்பு,
5-9-47.

F. R. Connolly,
மனேஜர்.

[Mis. 127—5-9-47]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2 ம் பக்கத் தொடர்ச்சி

ளுக்கும் விஷயத்தைச் சந்தோஷத்தோடு சொல்ல அவர்களுங் கேட்டு மகிழ்ந்தார்கள். இரு பகுதியாருக்கும் அந்த நீடித்த இரவு மகிழ்ச்சியோடு கழிந்தது.

**கப்பலிற் கல்யாணம்:**

அடுத்த நாள், குறித்த சுபமுகூர்த்தம் நிகழ்தலும், கண்ணகியம்மை விஷயத்தை இராமனுக்குச் சொல்லி அந்த ஆளை அழைத்து வரும்படி அனுப்பினுள். அதற்கென முற்றிலே ஆயத்தமாக இருந்த அந்த மனுஷன் மகிழ்ச்சியோடு எழுந்து தனது 'சூற் கேஸ்" எனப்படும் பிரயாணப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட, இராமன் "பெட்டியை என்னிடம் தாருங்கள், ஐயா" என்று சொல்லி அந்தப் பெட்டியைத் தான் வாங்கிக்கொண்டு முன்னே போக, மனுஷன் பின்னே சென்றுன். அந்த ஆளின் வரவைக் கண்ட கன்னியர் இருவரும் ஒதுங்கி மறைந்து நிற்க, கண்ணகியம்மையே அந்த ஆளை வரவேற்றுள். கப்பலில் வேறு ஆடவர்கள் பெண்கள் இருந்தாரெனினும், இவ்விஷயத்தை அவர்களுக்குச் சொல்லவும் அவர்களை இம் மங்கல கருமத்திலே துணைபுரிய விடவும் கண்ணகியம்மை விரும்பவில்லை. அப்படி அவள் விரும்பினுல விபரீதமாக நினைப்பார்களென்பதே அவளுடைய எண்ணம்; "தம்பி, "எங்களுடைய பெண்ணை ஏற்றுக்கொள்ள உமக்குச் சம்மதந்தானே" என்று கண்ணகியம்மை கேட்க, "முழுச் சம்மதந்தான்" என்று அந்த மனிதன் சொன்னுன். உடனே கண்ணகியம்மை பாக்கியலட்சுமி யொதுங்கிநிற்குமிடத்துக்குப் போய், அங்கு முந்தியே சிவபாக்கியம் அலங்காரஞ் செய்துவிட நாணத்தோடு நின்ற பெண்ணை அணைத்துக்கொண்டு வந்து, "ஆண்டவன் சாட்சியாக, சூரியன் சாட்சியாக, இச் சமுத்திரத்தின் தெய்வமாகிய வருணன் சாட்சியாக, என் உள்ளம் சாட்சியாக, இந்தப் பெண்ணை இச் சுபவேளையில் உமக்கு வாழ்க்கைத் துணைவியாகத் தருகின்றேன், ஏற்றுக்கொள்ளும்; ஏற்று நீடூழிகாலம் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வீர்களாக" என்று பயபத்தியோடு அக் கன்னிகையின் கரத்தை மாப்பிள்ளையின் கையில் ஒப்புவிக்க, உடனே அந்த மாப்பிள்ளையும் பயபக்தியோடு மேலே சொல்லப்பட்ட சாட்சிகளைத்தானும் சொல்லி ஏற்றுக்கொண்டான்; ஏற்றவுடன் மணமகளை இருக்கச்செய்து இராமனிடம் திறப்பைக் கொடுத்துத் திறப்பித்துத் தன் பெட்டியுள் வைத்திருந்த தாலி கூறை ஏனைய சம்மானங்களெல்லாவற்றையும் எடுத்து அங்கிருந்த ஒரு தட்டில்வைத்து விட்டு, முதல் தாலியை எடுத்துப் பெண்ணின் கழுத்திலே கட்டிவிட்டு உடனே கூறையையும் ஏனையசம்மானங்களையும் பெண்ணின் கையில் கொடுக்க அவள் எழுந்து தலைகுனிந்து நின்றபடி அவைகளை ஏற்றுள்; பின்னர் சிவபாக்கியம் மறைவில நின்று ஆயத்தஞ் செய்துவைத்த சிற்றுண்டியை இராமனைக் குறிப்பாற் கூப்பிட்டுக்கொடுக்க, அவன் கொண்டு வந்து மணமகள் கையிற்கொடுக்கத் தம்பதிகள் பரஸ்பரம் உணவுபரிமாறி அருந்தினர்; சிவபாக்கியம் கன்னி அவர்கள் காணுவண்ணம் ஒதுங்கி நின்று தான் அங்கு நிகழ்வனவற்றையெல்லாம் கண்டு கொண்டு ஊழின் வலிமையை வியந்தாள் எல்லாம் இறைவனருள் என்று உள்ளந்தெளிந்தாள்; சற்று நேரஞ் செல்ல, கண்ணகியம்மை மணமகளைப் பார்த்து "மாப்பிள்ளை இந்த நல்ல நேரத்திலேயே பெண்ணைத் தம்முடைய இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோகலாய்" என்று சந்தோஷத்துடன் சொல்ல "அப்படியே செய்கிறேன் ஆச்சி' என்றுசொல்லி மணமகன் மணமகளுடைய கரத்தைப்பற்றி நடக்க கண்ணகியம்மை சிறிது தூரம் பின்னேசெல்ல, தாயைத் தொடர்ந்து சிவபாக்கியமும் சற்றுத் தூரம் பின்னே படிவழியேறிச் செல்ல, அவர்கள்பின் இராமன் சென்றுன். கப்பலின் மேல்தட்டினைத் தம்பதிகள் அடைந்தவுடன், கண்ணகியம்மை தம்பதிகளை "சுகமேபோய் மீண்டு வாருங்கள்" என்று சொல்லி அவ்வளவில் நிற்கவும், 'ஓம் போய் வருகிறேம்" என்று மணமகன் திரும்பிப் பதில்சொல்லுதலும்கண்ணகியம்மையின்பிறகேஒரு அழகிய கன்னிகை வந்துநின்று திரும்புதலையும அவதானித்தான்; தம்பதிகள் விடை பெற்றுக்கொண்டு தங்களிடத்திற்குப் போக இராமனும் அவர்களுடன்போக, தாயும மகளும் தங்களிடத்திற்கு மீண்டனர்; மணமக்கள் தங்களிடத்தை யடைந்த மாத்திரத்தே இராமனும் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தாயும் மகளுமிருக்கும் இடத்திற்கு மீண்டான்.

**"என் பாக்கியமே'**

மாப்பிள்ளை தன் காதலியின் விரலில் ஒரு மோதிரத்தைத் தானுக இடுதலும், அந்த மோதிரத்தை மன மகிழ்ச்சியோடு பார்த்தபெண் பின்பு அதில் V. என்னும் ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்டிருத்தலை அவதானித்து "இந்த V. எழுத்து எதனைக் குறிக்கிறதென நீங்கள் எனக்குச் சொல்ல வொண்ணுதா" என்று கிளிபென மொழிய, "இது என் பெடரின் முதலெழுத்து" என்று காதலன் ஆதரத்துடன் சொல்ல, "உங்கள் பெயரை நான் சொல்லக் கூடாதல்லமல்,'உங்கள் முழுப் பெயரையும் நான்கேட்டறியலாகாதானே" என்றுள். "என் கண்மணியே! உமக்குச் சொல்லாமல் என் பெயரை யான் வேறு யாருக்குச் சொல்வது? என்னை விஜயரத்தினம் என்று சொல்வார்கள்" என இதமுறச் சொல்லி விட்டு "என் வாழ்க்கைத்துணைவியின் நாமத்தை நான் அறியவொண்ணுதா" என்று கணவன் கனிவுடன் வினவ, "பாக்கியம் என்றுதான் என்னைச் சொல்வார்கள்; என் முழுப்பெயரையும் சொல்லுகிற் பாக்கியலட்சுமியாகும்" என்றுள் மனையாள. 'என் பாக்கியமே! நீங்க ஆச்சியின் மகள் தானே நீர்" என்று நாயகன் சொல்ல, "ஆச்சியும் எனக்கு ஒரு தாய்தான்" என்று அன்புபெருகச் சொன்னுள் நாயகி; இதனைக்கேட்ட மாத்திரத்தே விஜயரத்தினம் சிறிது சந்தேகமுற்று 'சற்று முன்பு, நாங்கள் இங்கே வரும்போது, எங்கள் ஆச்சியின் பிறகே வந்து ஆச்சியோடு மீண்டுபோன அந்த அம்மாள் ஆர்? எனக்குச் சொல்லக் கூடாதா" என்று புருஷன்கேட்க, 'இனி உங்களுக் கொளித்து என்னுள்ளத்தில் ஒரு இரகசியம் இருக்க இடமுண்டா, நீங்கள் எதனைக் கேட்டாலும் நான் சொல்லுவேன், எதனைச் சொன்னுலும் சொன்னபடி செய்வேன்: அந்த அக்காதான் ஆச்சியின் சொந்த மகள்" என்று மனையாள் சொல்ல, "உங்கள் அக்காவின் பெயரென்ன" என்று கணவன் மீட்டும் வினவ, எங்கள் அக்காளையும் பாக்கியம் என்றே அழைப்பார்கள்; பூரணமான பெயர் சிவபாக்கியம்:' என்று உள்ளமுருகப் பன்னினுள் காதலி. கேட்ட விஜயரத்தினம் சற்று யோசித்தவண்ண மிருந்தான். (வரும்)

# நன்கொடை

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலைத் தொழிலாளர் மேற்படி யந்திரசாலை விருத்தியின்பொருட்டு நன்கொடையாக வழங்கிய நிதியின் விபரம்:

| பெயர் | ரூ. | ச, |
|---|---|---|
| R S மயில்வாகனம் | 5 | 00 |
| T செல்லையா | 10 | 09 |
| K ஆறுமுகம் | 3 | 96 |
| S S சுப்பிரமணியம் | 2 | 82 |
| S குழந்தைவேலு | 117 | 00 |
| K நடராசா | 118 | 00 |
| K குமாரசாமி | 3 | 37 |
| S சிவபாதசுந்தரம் | 108 | 33 |
| K கனகசபை | 138 | 81 |
| C பாலசிங்கம் | 139 | 00 |
| S முத்துலிங்கம் | 143 | 00 |
| N கந்தசாமி | 135 | 75 |
| N சின்னப்பா | 29 | 22 |
| S சுனகரேத்தினம் | 92 | 97 |
| M S இராசையா | 36 | 54 |
| மொத்தம் ரூபா | 1083 | 86 |

# தமிழ்மக்கள் தீர்ப்பு

## ஜீ. ஜீ. யின் மகத்தான வெற்றி

யாழ்ப்பாணத் தொகுதி எக்கட்சியை ஆதரிக்கிறதோ, அதுவே தமிழ் மக்களின உண்மையான அபிப்பிராயம் என்று இதுவரை எக்கட்சியினரும் கூறிவந்தனர். யாழ்ப்பாணம் நேற்றுத் தன் தீர்ப்பை அளித்துவிட்டது. அத்தீர்ப்பின் விபரம் இன்றுகாலை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்நீதித்தலத்தில் தெரிவிக்கப்பட்டது அதன்படி இந்த யாழ்ப்பாணத்து மக்கள், மிஸ்ரர் செனநாயக்காவின்ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கைகளை ஆதரிக்கவில்லை என்பதும், தமிழ்க் காங்கிரசின் மூலமாகவே அவர்கள் தங்கள் வருங்காலநிலையை நிர்ணயிக்கப்போகிறுர்கள் ஒன்பதும் ஊர்ஜிதமாய்விட்டது.

தீர்ப்பு விபரம் வருமாறு:

| | |
|---|---|
| திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் (தமிழ்க் காங்கிரஸ்) | 14321 |
| திரு. அ. மகாதேவா ( ஐ. தே. க ) | 5224 |
| பழுதான சீட்டுக்கள் | 133 |
| அதிகப்படியான வாக்குகள் | 9100 |
| மொத்தம் | 28781 |
| இத்தொகுதியில் மொத்தம் வாக்காளர் உளர். | 42,549 |

## முதற்பக்கப் பிரார்த்தனைப் பாவின் கருத்துரை

வேதங்களை யுணர்ந்த சிவஞானிகள் புகளுந் திருப்போரூரில் எழுந்தருளிய முருகக் கடவுளே! சகசிவர்களாகிய பொய்ஞ்ஞானக் கூட்டத்திற்கு உள்ளும் புறம்புமாய் விளங்கும் பரிபூரணரே! அடியேன் அஞ்ஞானத்தினுல் தேவரீர் திருவடிக்குப் பிழை செய்யினும், ஆன்மாக்களிடத்து நிறைந்த கருணையுடைய மெய்ஞானத்தையுடையீர் நீராதலால் அதனைப் பொறுத்து என்னையடிமைகொள்க என்பதுபொருள்.

செகமும் உயிரும் பொய்மையாதலால் செகமுயிராம் பொய்ஞ்ஞானக் கூட்டமெனவும், இருவினைக்கீடாக உயிர்களுக்குச் சுகதுக்கங்களை யூட்டுதலால் உள்ளோனவும், தோன்றியழியுஞ் செகத்துக்கு அப்பாற்பட்டவனுதலால் புறனுகிய எனவும், உள்ளும் புறமபுமாய் எங்கும் நிறைந்திருத்தலின் பூரணனே எனவும், பேரருளுடையனுதலால் ஆரருள்சேர் எனவும், இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்பவனுதலால் மெய்ஞ்ஞானத்தா யெனவும், பாசங்களில் தான் பற்றுடைமையால் நின்னை மறத்தலால் அடியேன் பிழை செய்யினுமெனவும் அப்பிழையைப் பேரருளுடையர் நீவிராதலின் பொறுத்தாளுதல் உமது கடனுதலால் பொறுத்தாட்கொள்ள வேண்டுமெனவுங் கூறினுர்.

# போர்ச் சந்தத்தம்

## பலஸ்தீனத்துப் பிரச்சினை

உரலுக்கு ஓர் பக்கத்தில் இடி மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடிஎன்பர். அதுபோல இன்று பலஸ்தீன விஷயத்தில் இங்கிலாந்துக்கு அராபியராலும் யூதராலும் இடி கொடுக்கப்படுகிறது. ஐக்கியதேச ஸ்தாபனத்து விசாரணைச் சபை அளித்த தீர்ப்பில் யூதரும் அராபியரும் அதிருப்தி தெரிவிக்கிறுர்கள்.

பலஸ்தீனத்தைப் பிரிவினை செய்ய ஷை விசாரணைச்சபை சிபாரிசு செய்தமை பிரிட்டனின் சூழ்ச்சியே என்றும், பிரிட்டிஷாரைப் பலஸ்தினத்தி லிருந்து விரட்டும்வரை நாட்டில் சமாதானம் ஏற்படமாட்டாது என்றும் யூதஸ்தாபனம் கூறுகிறது. பிரிட்டிஷாருடன் போர் செய்தே அவர்களை விரட்டவேண்டுமென்றும் அது கூறுகிறது.

யூதர்களது லட்சியங்களை அடையவில அராபியர் முட்டுக்கட்டை யிடுவாரானல், அராபியரை எதிர்த்தும் யுத்தம் செய்ய யூதர் ஓர்போதும் பின்வாங்கமாட்டார்கள் என்றும் யூதப் பிரமுகர்கள் கூறுகின்றனர்.

பலஸ்தீனத்தை ஓர்போதும் பிரிவினை செய்ய முடியாது என்று அராபியர் அபிப்பிராயம் கூறுகின்றனர்.


## தந்தரோக சஞ்சீவி

## கந்தசாமி வைத்தியர் சந்தனுதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு ஏவக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரு 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும். முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றேயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினுங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக்கணக்கானேர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வட இலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிரேம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, சாங்கேசன்துறைரேட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std3 3ζ—9—47&

உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

## ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

# திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந் தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக் கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இ பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம் "

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1.7.47 30-9-47

## ஹிந்தி—உருது

இந்த இரண்டு மொழிகளையும் தமிழ் மொழி மூலமாகவேனும், மலையாளப் பாஷை மூலமாகவேனும் இலகுவிற் பயிலுதல்ாகும்,

விரும்பினேர் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாகும்.

அற்லஸ் ஹால்
தபாற்பெட்டி இலக்கம் 649
கொழும்பு

Std. 18. 29 8 47

## கடவுளும் விஞ்ஞானமும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தை இரேடி என்பவர் அகற்றினர் என்பதும், டால்டன் கருத்தினல் மாயா காரியமாகிய உலகப் பொருள் அழிவதில்லை என்பதும் கடவுளைப்பற்றிக் கணித ஞானிகள் கருத்து இதுவென்பதும், விஞ்ஞானம் அகிலை வளர்ச்சிக்கும் அமைதிக்கும் கருவியாவதில்லை என்பதும், எடிங்க்டன். ஜின்ஸ் என்னும் விஞ்ஞானிகள் இவவுலகம் கற்பனையால் தோன்றியது என்ற கருத்துடையவர்கள் என்பதும் இறைவனை யாவரும் அடைய முயற்சித்தல் வேண்டும் என்பதும் பிறவுமாகும்.

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

| | | |
|---|---|---|
| ஒருரூத்தல் விலை | ரூபா | 25 |
| அரைரூத்தலுக்கு | ரூபா | 12-50 |
| கால்ரூத்தல் | ரூபா | 6-25 |

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்சப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std 29 1-8—30 7-48 ) (F)

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23 6-6-47—6 6-48

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முாசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றன் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திரானு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna on Friday, September 5, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org